RTROP. 54 OF 2022 – Date : 04.02.2026

CW1 – வசந்தகுமாரி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

ஆர்ஜிதம் செய்த நிலம் எனக்கு பூர்வீக சொத்து என்றால் சரியல்ல. கிரயத்திற்கு வாங்கிய சொத்தாகும். யார் பெயரில் கிரயம் பெற்றேன் என்றால் என் பெயரிலும் என் கணவர் பெயரிலும் கிரயம் பெற்றோம். எனது கணவரை மனுவில் சேர்க்கவில்லையா என்றால் நான்தான் கிரயம் பெற்றேன். அதனால் அவரை சேர்க்கவில்லை. மேற்படி கிரயப்பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. அந்த கிரயப்பத்திரத்தை தாக்கல் செய்தால்தான் சொத்தின் உரிமையாளர் யார் என்று தெரிய வரும் என்றால் சரி. எத்தனை ஏக்கர் வாங்கினேன் என்றால் 75 செண்ட் நிலம் வாங்கினேன். விவசாய நிலமாக கிரயம் பெற்றேன் என்றால் சரியல்ல. கிரயப்பத்திரத்தை தாக்கல் செய்தால் விவசாய நிலம் என்பது தெரிந்துவிடும் என்பதால்தான் மேற்படி பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நிலம் ஆர்ஜிதம் செய்தபோது சொத்தில் உள்ள கட்டிடத்திற்கும் தனியாக இழப்பீடு கொடுக்கப்பட்டது என்றால் குறைாக கொடுக்கப்பட்டது. நில ஆர்ஜிதம் குறித்து 12.8.2020 தேதியில் அறிவிப்பு வந்தது என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு

பின்னர் 24.2.2021 தேதியில் நிலம் மற்றும் அதில் இருந்த கட்டிடத்திற்கும் மதிப்பீடு செய்யப்பட்டு இழப்பீடு வழங்கப்பட்டது என்றால் சரி. இழப்பீட்டை அதிகப்படுத்தக் கோரி நில எடுப்பு அதிகாரியிடம் ஆவணங்கள் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அரசு வழிகாட்டி ஆவணங்கள் ஆர்ஜித நிலத்திற்கு அதிக தூரத்தில் உள்ள நிலங்கள் என்றால் சரியல்ல. EX.C2 ஆவணத்தில் கண்ட சொத்து எனது நிலத்திலிருந்து அதிக தூரத்தி்ல் உள்ள சொத்து என்றால் சரியல்ல. EX.C1 ஆவணத்தில் வங்கி கடன் கொடுத்ததாக காட்டப்பட்டுள்ள நிலம் ஆர்ஜித நிலத்திலிருந்து வெகுதொலைவில் உள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு வங்கி கடன் கொடுக்கும்போது நிலத்தின் மதிப்பு, கட்டிடத்தின் மதிப்பு மற்றும் அதில் அமைக்கப்பட்டுள்ள நிறுவன பொருட்களின் மதிப்பு ஆகியவற்றை கணக்கில் கொண்டுதான் கடன் வழங்கப்பட்டிருக்கும், எனவே அந்த கடனுக்கான திட்ட மதிப்பீடு ஆவணத்தை தாக்கல் செய்யாமல் நிலத்தின் மதிப்பை நிர்ணயிக்க முடியாது என்றால் சரியல்ல.

ஆர்ஜிதம் செய்த நிலம் போக மீதி உள்ள நிலங்கள் இன்றுவரை விவசாய நிலமாக பயன்பாட்டில் உள்ளது என்றும், ஆர்ஜிதம் செய்த நிலம் மனை நிலமாக வரையறை செய்யப்பட்டதற்கான எந்த ஆதாரமும் இல்லாமல் இந்த கோரிக்கையை ஏற்க முடியாது என்றால்

சரியல்ல. நிலத்தின் தன்மையை அதிகப்படுத்தி காட்ட எந்த ஆவணமும்தாக்கல் செய்யாமல் அதிக இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காகவே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றும் எனவே மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal District Judge, Salem.